# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Website : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண்.15 / 2015**

திரு. வீ. லட்சுமணன்,
த/பெ வீரன்,
விநாயகபுரம் 1ஆம் வீதி,
இராஜகோபாலபுரம் அஞ்சல்,
கட்டியாவயல்,
புதுக்கோட்டை . . . மேல்முறையீட்டாளர்
(திரு. வீ லட்சுமணன்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
3074 கிழக்கு பிரதான சாலை,
புதுக்கோட்டை – 622 011 . . . எதிர்மனுதாரர்
(திரு. D. ரகுராஜ், செயற்பொறியாளர்/கீரனூர்)

**கேட்புரை நாள் : 16–4–2015**

**ஆணை நாள் : 6–7–2015**

திரு. வீ. லட்சுமணன், த/பெ வீரன், கட்டியாவயல், புதுக்கோட்டை அவர்களின் 28–12–2014 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.15/2015 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 16–4–2015 அன்று நடத்தப்பட்டது. மேல் முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் மேல்முறையீட்டாளரின் எழுத்துபூர்வமான வாதங்கள். எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பிரதிநிதி கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை**

மேல்முறையீட்டாளர் அவரின் மனுவை கருணையுடன் பரிசீலனை செய்து அவரையும் விசாரித்து அவரது நிலத்திற்கு மின்னிணைப்பு வழங்க வேண்டுகிறேன் என்று கோரியுள்ளார்.

2. <u>வழக்கின் சுருக்கம்</u>

2.1 புதுக்கோட்டை மாவட்டம், மேலமுத்துக்காடு கிராமம், புல எண்.132/123ல் உள்ள நிலமும் கிணறும் மேல்முறையீட்டாளர் திரு. வீரன் அவர்களால் மேல்முறையீட்டாளருக்கு 30.1.2003ல் இனாம் செட்டில்மெண்ட் மூலம் வழங்கப்பட்டது.

2.2 மேற்கண்ட கிணற்றிற்கு விவசாய மின்னிணைப்பு வேண்டி விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த விண்ணப்பத்தின் பதிவு எண்.55/3–10.1988ஆகும். மேற்கண்ட விண்ணப்பம் பதிவு மேல்முறையீட்டாளர் பெயருக்கு மாற்றப்பட்டது. அவரும் தன்னுடைய தயார்நிலையை 27.12.2004 அன்று பதிவு செய்துள்ளார்.

2.3 இதற்கிடையில் மேல்முறையீட்டாளரின் தகப்பனார் அந்த இனாம் செட்டில்மெண்ட்ஐ ரத்து செய்து மேல்முறையீட்டாளரின் பெயரிலிருந்த பட்டாவும் ரத்து செய்யப்பட்டுவிட்டது. மேலும், அந்த நிலத்தை சாந்தார் என்பவருக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்டுவிட்டது. எனவே, மேல்முறையீட்டாளரின் தந்தையாரின் ஆட்சேபனையின் பெயரில் மேல்முறையீட்டாளருக்கு மின்னிணைப்பு மறுக்கப்பட்டது.

2.4 மேல்முறையீட்டாளர் OS No155/05 சொத்துரிமை பற்றிய வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஆனால், அந்த வழக்கின் முடிவு அவருக்கு சாதகமாக இல்லை என்பதால் வழக்கு எண். AS 3/2008ல் புதுக்கோட்டை மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார். அந்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனை மீண்டும் கோப்பில் எடுத்து விசாரணை செய்யவேண்டும் என்ற கோரிக்கையின் பேரில் AS NO 3/20011ல் சமாதான உடன்படிக்கையின்படி மேற்படி சொத்து அவருக்கு உரிமையாகிஉள்ளது என்று 27.9.2012இல் மாவட்ட விரைவு நீதிமன்றம் தீர்வு வழங்கியுள்ளது.

2.5 எதிர்மனுதாரர் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் WP No 4991/05 என்று தாக்கல் செய்த வழக்கில் மின் இணைப்பு உடனே வழங்க வேண்டும் என்று கோரியிருந்த வழக்கு 22.9.2008 தள்ளுபடி செய்யப்பட்டதால் அவருக்கு மின்னிணைப்பு வழங்க வேண்டியதில்லை என்று வாதிட்டுள்ளார்.

2.6 மேல்முறையீட்டாளர் தனக்கு மின்னிணைப்பு வழங்க உத்தரவு இடவேண்டும் என்று புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார். மன்றம், மேல்முறையீட்டாளரின் மனுவை தள்ளுபடி செய்துள்ளது. எனவே, மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின் குறைதீர்ப்பாளர் முன்பு சமர்ப்பித்துள்ளார்.

**3. <u>மன்றத்தின் தீர்வு</u>**

3.1 புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் 24.12.2014 நாளிட்ட தீர்வின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"இந்த நிலையில் திரு.வீரன் அவர்களின் ஆட்சேபனையின்படி உரிய விசாரணைக்குப்பிறகு திரு. வீ. லட்சுமணன் பெயருக்கு வழங்கப்பட்டிருந்த பட்டா மாறுதல் உத்தரவு புதுக்கோட்டை சார் ஆட்சியாளர் அவர்களால் **6.12.2004**ல் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. பின்னர் மேற்படி தாவாவிற்கு உரிய இடம் திரு. வீரன் அவர்களிடமிருந்து திரு. சாந்தார் பெயருக்கு ஆவண எண்.**1766/2005**ன்படி கிரயமும் பின்னர் திரு. சாந்தார் அவர்களால் பவர் பத்திரம் ஏற்படுத்தி திரு. அஞ்சப்பன் என்பவரிடமிருந்து மருதாயி என்பவருக்கு ஆவண எண்.**227/2008**ன்படி கிரயம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக திரு. வீ. லட்சுமணன் அவர்களால் பல நிலைகளில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு இறுதியாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் **22.9.2008**ல் மனுதாரர் திரு. வி. லெட்சுமணன் அவர்களுக்கு பாதகமாகவே தீர்ப்பாகி உள்ளது தெரியவருகிறது.*

*எனவே, மேற்படி உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மின்னிணைப்பு வழங்க மின்சார வாரியத்திற்கு எவ்வித உத்தரவும் வழங்கப்படாததாலும், சொத்து மற்றும் மின்னிணைப்பு தொடர்பான தாவா திரு. வி. லெட்சுமணன் அவர்களுக்கு எதிராக முற்றுப்பெற்றதாலும் அரசு வழக்கறிஞர் கருத்துரு அடிப்படையில் திரு. வி. லெட்சுமணன் பெயருக்கு வழங்கப்பட்ட பெயர்மாற்ற உத்தரவு மற்றும் தயார் நிலை பதிவு ஆகியவை மேற்படி நீதிமன்ற உத்தவு பெறப்பட்ட நாளிலேயே இரத்து செய்யப்பட்டதாகவே கருதப்படவேண்டும் (*Deemed to be cancelled*) என்ற வாரிய தரப்பின் பதில் ஏற்புடையதாகவே உள்ளது. தயார் நிலை இரத்து ஆனாலும் **29.10.2004**ல் வழங்கப்பட்ட **90** நாள் அறிவிப்பு கடிதம் வாரிய உத்தரவின்படி **5** வருடம் **90** நாட்கள் செல்லத்தக்கது என்றும் அந்த கால கட்டத்திற்குள் மேற்படி தாவாவிற்கு உரிய இடத்திற்கு வழங்கப்பட்ட நோட்டீஸின் அடிப்படையில் தயார் நிலையை பதிவு செய்ய யாரும் முன்வராத காரணத்தாலும் மேற்படி இடத்தின் மீதான இதர வழக்குகளில் மின் வாரியத்தை தொடர்பு படுத்தியோ அல்லது மின் வாரியத்தை ஒரு வாதியாக சேர்த்து வழக்கு எதுவும் நிலுவையில் இல்லாத காரணத்தாலும் விண்ணப்ப பதிவு எண்.**55**, நாள் **3.10.1988**ற்கு வழங்கப்பட்ட **90** நாட்கள் அறிவிப்பு கடிதம் வாரியம் நிர்ணயம் செய்துள்ள **5** வருடம் **90** நாட்கள் முடிவடைந்த நிலையில் இரத்து செய்யப்பட்டுள்ளது என்ற வாரிய தரப்பின் பதிலும் ஏற்புடையதாகவே உள்ளது.*

*எனவே, மேற்படி,மனுதாரரின் கோரிக்கைக்கு வாரிய தரப்பில் அளித்துள்ள விளக்கங்கள் ஏற்புடையதாக உள்ளதாலும் மனுதாரரின் கோரிக்கைக்கு அடிப்படை ஆதார ஆவணங்கள் இல்லாததாலும், சட்டப்பூர்வமாக இல்லாததாலும் புகார் மனுதாரரான திரு. வி. லெட்சுமணன், த/பெ வீரன் அவர்களுக்கு மின்னிணைப்பு வழங்க நடைமுறையில் உள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக விதிமுறைகளின்படி முகாந்திரம் இல்லாத காரணத்தாலும் மனுதாரருக்கு பரிகாரம் எதுவும் வழங்க இயலாது எனக்கருதி இம்மன்றத்தால் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.''*

4. <u>மனுதாரரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>

4.1 புதுக்கோட்டை மாவட்டம் மேல முத்துக்காடு கிராமம் புல எண்.132/123ல் உள்ள நிலமும் கிணறும் அவரது தகப்பனார் வீரனால் அவருக்கு இனமாக கொடுக்கப்பட்டு 31.1.2003ல் அவரது பெயருக்கு ஒரு இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்திருக்கின்றார். அதுமுதல் அந்த நிலமும் கிணறும் அவருக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்திலும், சுவாதீனத்திலும்இருந்து வருகிறது.

4.2 அந்த செட்டில்மெண்ட் பத்திரத்திற்கு முன்பு அந்த கிணற்றுக்கு மின் இணைப்பு வேண்டி அவரது தகப்பனார் விவசாய மின்னிணைப்பு பதிவு எண்.55/3.10.1988ல் விவசாய காரியத்திற்கு மின்னிணைப்பு வேண்டி பதிவு செய்துள்ளார். அவருக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கப்பட்ட பின்னர் அந்த கிணற்றிற்கு அவர் உரிமையாளராகி விட்டதால் அவர் பெயரில் அவர் தகப்பனார் பதிவு செய்த பதிவு அவரது பெயருக்கு மாற்றப்பட்டது. அந்த நிலத்தின் பட்டாவும் அவரது பெயருக்கு மாற்றப்பட்டது.

4.3 அவருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய சட்டப்படி உரிமையில்லை. ஆனால் இதனை ரத்து செய்தது போல் சட்டத்திற்கு முரணாக ஒரு பத்திரத்தை எழுதி அந்த பதிவையும் ஏற்படுத்தி வருவாய் துறைக்கு மேல்முறையீடு செய்ததில் சட்ட விரோதமான தீர்ப்பினை பெற்று அவரது பெயரில் உள்ள பட்டாவை அவர் தகப்பனார் ரத்து செய்து விட்டார். அதன் பின் முன்தேதியிட்டு ஒரு போலி கிரய அக்ரிமென்டை உற்பத்தி செய்து சாந்தார் என்பவர் பெயரில் கிரையம் செய்து கொடுத்துவிட்டார். அந்த செட்டில்மெண்ட் இரத்து மூலம் அவரது பெயருக்கு பெறப்பட்ட பட்டாவை ரத்து செய்து அந்த உத்தரவை மேற்கோள்காட்டி அவருக்கு பாத்தியப்பட்ட அந்த அவருடைய கிணற்றிற்கு மின்னிணைப்பு வழங்கக்கூடாது என்று அவர் தகப்பனார் செய்த ஆட்சேபனை மனுக்களின் அடிப்படையில் மின்னிணைப்பு வழங்க மின் வாரியத்தால் மறுக்கப்பட்டது. ஆனால், அவர் மின்மோட்டார் மற்றும் இதர உபகரணங்களுடன் மின்னிணைப்பு பெற தயார்நிலை பதிவேட்டில் பதிவு செய்ய எப்பொழுதும் தயாராக இருந்து வந்தார்.

4.4 அவரது தகப்பனார் தாக்கல் செய்த ஆட்சேபனை மனுக்களை காரணம் காட்டி மின்னிணைப்பு பெற தயாராக இருந்த நிலையில் அவர் தயார் நிலை பதிவேட்டில் பதிவு செய்ய மின்வாரிய அதிகாரிகள் அவரை அனுமதிக்கவில்லை. அவர் பெயரில் எழுதிவைக்கப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தைரத்து செய்து பிரச்சனை செய்ததால் அச்சொத்து அவருக்கு பாத்தியம் எனவும் அது அவருக்குள்ள அனுபவத்தில் அவர் தகப்பனாரோ அவருடைய ஆட்களோ எந்த குறிக்கீடும் செய்யாமல் இருக்க Permanent Injection வேண்டியும் புதுக்கோட்டை சப்கோர்ட்டில் அவர் OS No 155/05ல் வழக்கு தாக்கல் செய்தார். ஆரம்பத்தில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட போதிலும், அதனை எதிர்த்து புதுக்கோட்டை மாவட்ட நீதிமன்றத்தில் AS No 3/2008 என்ற எண்ணிற்கு அவர் மேல்முறையீடு செய்ததில் தாவா சொத்து அவருக்கு பாத்தியப்பட்டது எனவும் அவருக்கு வழக்கில் கோரியிருந்தபடி 27.9.2012ல் புதுக்கோட்டை மாவட்ட விரைவு நீதிமன்றதில் அவருக்கு சாதகமாக தீர்ப்பானது. அந்த தீர்ப்பிற்கு நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு நகலில் சில முக்கியமான ஷரத்துக்கள் விடுபட்டிருப்பதால் சரியான நகல் பெற்று விரைவில் கனம் குறைதீர்ப்பாளர் வசம் சமர்ப்பிக்கிறேன் என்று இதன் மூலம் உறுதி கூறுகின்றேன்.

4.5 சொத்தின் உரிமைப்பற்றி முடிவு செய்யும் அதிகாரம் வருவாய்த்துறை அதிகரிகளுக்கோ, மின்வாரிய அதிகாரிகளோ தாவா சொத்து யாருக்கும் சொந்தம் என்பதை முடிவு செய்ய முடியாது என்று எல்லோருக்கும் தெரிந்த உண்மை. மதுரை உயர்நீதிமன்ற கிளையில் W PNo 4991/05 அவர் தாக்கல் செய்த மனு Meritல் தள்ளுபடி செய்யப்படவில்லை . அந்த ரிட் மனு விசாரணைக்கு வந்த சமயம் புதுக்கோட்டை மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு AS No 3/2008 தவறுதலுக்காக தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் இருந்தது. அதன் அடிப்படையில் பிரச்சனைக்குரிய கிணற்றில் அவருக்கு உரிமையில்லை என்ற கருத்தும், அந்த ரிட் மனு தள்ளுபடி செய்யப்பட்டதில் தவறுதலுக்காக தள்ளுபடி செய்யப்பட்ட AS No3/2008 வழக்கினை மீண்டும் கோப்பில் எடுத்து விசாரிக்க வேண்டுமென அவர் தாக்கல் செய்த மனுவின் பெயரில் அந்த வழக்கு மீண்டும் கோர்ட்டில் எடுக்கப்பட்டு தீர்ப்பு அவருக்கு கிடைக்கப்பெற்றது. இந்த தீர்ப்பும் சட்டத்தின்படி OS No155/05 தாக்கல் செய்த தேதியிலேயே பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாகதான் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். இதுவே சட்ட கோட்பாடாகும்.

4.6 எனவே இதனடியில் கண்ட கிணறு நிலமும் அனைத்தும் அவர் தகப்பனார் அவருக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்த தேதியிலிருந்து அவருக்கு மட்டும் பாத்தியம். மேற்கண்ட நடப்புகளை புதுக்கோட்டை மாவட்ட மின் வாரிய அதிகாரிகளுக்கு மனுக்கள் மூலம் விளக்கி அவருக்கு மின்னிணைப்பு வழங்க வேண்டியும் பயன் ஏதும் இல்லை என்பதால் அதன் பின் புதுக்கோட்டை மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மனு செய்தார். அந்த மன்றத்திலும்

சட்ட ஷரத்துக்களையும் உண்மை நடப்புகளையும்சரியாக பரிசீலிக்காமல்மற்றும் ஏற்க தகாத காரணங்கள் கூறி தள்ளுபடி செய்துவிட்டனர். அப்படி செய்வதற்கு அவர்கள் சொல்லும் காரணங்கள் இயற்கை நீதி நெறிமுறைகளுக்கும் சட்ட ஷரத்துக்களுக்கும் உண்மை நடப்புகளுக்கும் விரோதமானது. அவர் எப்பொழுதும் மின்னிணைப்பு பெற தயாராக இருந்து வந்துள்ளார். ஏற்புடைய காரணங்கள் இன்றி புதுக்கோட்டை மாவட்ட மின்வாரிய மேல் அதிகாரிகளால் அவருக்கு மின்னிணைப்பு வழங்க மறுக்கப்பட்டு வருகிறது. மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற தீர்ப்பாணை கொரியர் மூலம் அவரது கையில்கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து ஒருமாத கால அவகாசத்தற்குள் இந்த மேல்முறையீட்டுமனுவை கனம் மின் நுகர்வோர் குறைதீர்ப்பாளர் வசம் சமர்ப்பிக்கிறார்.

4.7 ஆகவே, மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் 24.12.2014ல் பிறப்பித்த ஆணையை ரத்து செய்து அவருக்கு விரைவில் மின்னிணைப்பு வழங்க வேண்டியுள்ளார். அவரது நிலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட தென்னை மரங்கள், தண்ணீர் இன்றி பட்டு கருகும்நிலையில் உள்ளது. இந்நிலமானது 1958ல் காலஞ்சென்ற தமிழக முன்னாள் முதல்வர் கு. காமராஜ் அவர்களால் இலவச பஞ்சமி நிலமாக அவரது தகப்பனாருக்கு வழங்கப்பட்டது. 1958ல் இருந்து மின் இணைப்பு இன்றி வாழ்வதற்கு வாழ்வதாராம் இன்றி அவரும் அவரது குடும்பத்தாரும் ஒவ்வொரு நாளும் சொல்லெணா துயரத்தை அனுபவிக்கின்றனர்.

5. <u>எதிர்மனுதாரர் பதிலுரையிள்ள வாதங்கள்</u>

5.1 குளத்தூர் தாலுகா முத்துக்காடு கிராமம் பட்டா எண்.447, புல எண். 132/123ல் உள் கிணற்றுக்கு விவசாய மின்னிணைப்பு வேண்டி முத்துக்காடு கிராமம், பர்மா காலனியில் வசிக்கும்திரு. வீரன் என்பவர் பதிவு எண்.55 நாள், 3.10.1988ன்படி பதிவு செய்துள்ளார். மேற்கண்ட பதிவிற்கு சாதாரண வரிசையில் மின்னிணைப்பு பெறுவதற்கு தயார் நிலை அறிவிப்பு கடிதம் எண்.செ.பொ/இ.கா./கீர/தொ.நு.1/கோ.விவ/எண்.42/2004 எண்.29.10.2004ன்படி அனுப்பப்பட்டுள்ளது.

5.2 மேற்படி புல எண். உள்ள இடத்தை திரு. வீரன் அவர்கள் தனது மகன் திரு. வீ லெட்சுமணன் என்பவருக்கு 31.1.2003ல் இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் செய்து கொடுத்துள்ளார். இந்நிலையில் திரு. வீரன் பெயரிலிருந்து திரு. வீ. லெட்சுமணன் பெயருக்கு பெயர் மாற்றம் மற்றும் தயார் நிலை பதிவு செய்ய கால அவகாசம் கேட்டு க.எண்.செ.பொ/இ.கா/கீ./தொநுஉ/கோ5/எண்.370/04 நாள்10.12.2004ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

5.3 அதே நேரத்தில் திரு. வீரன் அவர்களும் தனது மகன் திரு. வீ. லெட்சுமணன் பெயருக்கு இனாம் செட்டில்மெண்ட பத்திரத்தை 16.6.2003ல் ரத்து செய்துவிட்டதாகவும் பட்டா மாறுதல்

உத்தரவையும் ரத்து செய்து விண்ணப்பித்துள்ளதாகவும் கூறியுள்ளார். இது தொடர்பாக பெயர் மாற்றம் செய்வதற்கு திரு. வீரன் பெயரில் இருந்து திரு. வீ. லெட்சுமணன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய வழக்கறிஞரின் கருத்துரையில் I have perused the files. The land in SF No132/123 was formerly belonged to V Veeran. He settled this prperty in favour of his son by means of registred settlement deed dated 31.1.2003, patta has also been changed in the name of the applicant lakshmanan. VAO certificate also confirms the possession of lakshmanan, so name transfer and service connection may be made in the name of lakashmanan" அடிப்படையில் திரு. வீ.லெட்சுமணன் பெயருக்கு 10.12.2004ல் பெயர் மாற்றம் அனுமதி வழங்கி தயார்நிலை பதிவு செய்ய நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மனுதாரர் திரு. வீ. லெட்சுமணன் தனது தயார் நிலையை உ.மி.பொ/இ.கா/வ/கீரனூர் அலுவலகத்தில் தயார் நிலை பதிவேட்டில் தயார் நிலை பதிவு எண்.1/27.12.2004ன்படி தயார் நிலை பதிவு செய்துள்ளார்.

5.4 இந்நிலையில் திரு. வீ. வீரன் அவர்கள் தமது ஆட்சேபனையில் கூறியிருந்தவாறு உரிய விசாரணைக்கு பின்பு திரு. வீ லெட்சுமணன் பெயருக்கு பட்டா மாறுதல் வழங்கிய உத்தரவை புதுக்கோட்டை சார் ஆட்சியர் (பார்வை நி.க.8478/2003)ல் 6.12.2004 ரத்து செய்துள்ளதாகவும் உரிய உத்தரவு நகலுடன் திரு. லெட்சுமணனுக்குமின்னிணப்பு வழங்க கூடாது என ஆட்சேபனை கடிதம் அளித்துள்ளார்.

5.5 இந்நிலையில் திரு. வீ. லெட்சுமணன் அவர்கள் மேற்படி பட்டா மாறுதல் ரத்து உத்தரவை சரிசெய்ய DRO முன்பாக 22.12.2004ல் சீராய்வு மனு செய்துள்ளதாகவும் கீரனூர் சிவில் கோர்ட்டில் 23.12.2004ல் கேவியட் மனு தாக்கல் செய்துள்ளதாகவும் கூறி தனது தந்தையின் ஆட்சேபனை செல்லத்தக்கது அல்ல என்றும் தனது தயர்நிலை பதிவின் அடிப்படையில்மின்னிணைப்பு வழங்கக்கோரி மனு அளித்துள்ளார்.

5.6 இது தொடர்பாக அரசு வழக்கறிஞரிடம் அறிவுரை கோரியதற்கு பட்டா மாறுதல் உத்தரவின் மீது DRO வின் இறுதி முடிவின் அடிப்படையில் மேல் நடவடிக்கை தொடரலாம் என கருத்துரு வழங்கியுள்ளார் . இது தொடர்பாக DRO விடம் இருந்து இது தொடர்பான உத்தரவு ஏதும் பெறப்பட்டதற்கான ஆவணம் ஏதும் இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை.

5.7 இந்நிலையில் திரு. வீ. லெட்சுமணன் அவர்கள் செ.பொ/இ.கா/கீரனூர் அவர்களை முதல் பிரதிவாதியாக சேர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P. 4991/2005 நாள் 4.6.05ல் மனு செய்து அதற்கு இவ்வலுவலகத்தின் வாயிலாக எதிர்வாதுரை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்து வந்தது.

5.8 இந்நிலையில் திரு. வீரன் அவர்கள் 3.8.2005ல் சாந்தார் பெயருக்கு ஆவண எண்.1766/2005ன்படி மேற்படி இடத்தை கிரையம் செய்து கொடுத்தார். மேற்படி கிரையம் திரு. வீ லெட்சுமணன் அவர்களுக்கு இனாம் செடடில்மெண்ட் பதிவு செய்ததற்கு முன்பாக உள்ள தேதியில் ஏற்படுத்தப்பட்ட கிரைய agreement அடிப்படையில் செய்யப்பட்டுள்ளது என்று திரு. வீ. லெட்சுமணன் அவர்கள் தமது 30.12.2013ல் முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுவிற்கு அனுப்பப்பட்ட மனுவிலிருந்து தெரிய வருகிறது.

5.9 மேற்படி பத்திரப்பதிவு செல்லாது என்று திரு. வீ. லெட்சுமணன் புதுக்கோட்டை நீதிமன்றத்தில் OS No 155/2005 என்று வழக்கு பதிவு செய்துள்ளார். அவ்வழக்கில் மின்சார வாரியம் ஏதும் பிரதிவதியாக சேர்க்கப்படவில்லை. அந்த வழக்கும் 25.5.2007 அன்று வாதிக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

5.10 மீண்டும் திரு. வீ. லெட்சுமணன் அவர்கள் AS No3/2008 என்ற வழக்கு எண்ணில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் புதுக்கோட்டையில் வழக்கு தொடர்ந்து அவ்வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

5.11 இந்நிலையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட WP No 4991/2005 வழக்கில் 22.9.2008ல் கீழ்கண்ட தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

*1.Thereafter, the third respondent got the Inam Settlement Register in favour of the petitioner and cancelled the registered document No 1225 dated 16.6.2003. Based on the same, the second respondent Reveue Divisional officer cancelled the patta bearing No447 isued by the Deputy Tahsildar, Kulathur Taluk by his proceedings dated 6.12.2004.*

*2. Therefore, in the light of the terms and conditions for the supply of electricity, more particularly, as found in clause 6.02, if a person is not a owner, then he should produce a consent letter in the form prescribed by the Board from the real owner of the land. Since, the petitoner had not produced any such letter, the Board cannot accede to the request made by the petitioner.*

*3. In the meanwhile, it is found that the petitioner had filled O.S. No.155 of 2005 against the third respondent from interfering with his properly. The said suit which was tried by the Sub-Judge was dismissed by the judgment dated 25.7.2007. Thereafter, the petitioner's is attempt in fillig an appeal in A.S. No.3 of 2008 before the Principal District Judge, Pudukottai also resulted in failure and his Appeal was dismissed on 1.6.2008 for default in appearance.*

*4. In the light of the same, the prayer in the writ petition cannot be countenanced by this court and accordingly, it stands dismissed, No Costs."*

12. எனவே, மேற்படி உயர்நீதிமன்ற தீர்ப்பு அடிப்படையில் மின் இணைப்பு வழங்க எவ்வித உத்தரவும் வழங்கப்படாததாலும் சொத்து தொடர்பான தாவா திரு. வீ. லெட்சுமணன் அவர்களுக்கு எதிராக முற்றுப் பெறப்பட்டதாலும் அரசு வழக்கறிஞரின் அறிவுரையின் அடிப்படையில் திரு. வீ. லெட்சுமணன் பெயருக்கு வழங்கப்பட்ட பெயர் மாற்றம், உத்தரவு, தயார் நிலை பதிவு செய்ய வழங்கப்பட்ட உத்தரவு மற்றும்மனுதாராரின் தயார் நிலை ஆகியவை ரத்து செய்யப்பட்டதாகவே கருதப்படவேண்டும்(Deemed to be cancelled)

13. பின்பு மேற்படி மின் இணைப்பு தெடர்பான வழக்கு ஏதும் மின் வாரியத்தினை தொடர்புபடுத்தி மின் வாரியத்தை வாதியாக சேர்த்து எந்த ஒரு நீதிமன்றத்திலும் வழக்கு நடைபெறவில்லை. தாவா சொத்து மேற்படி திரு. வீ. லெட்சுமணன் அவர்களுக்குதான் சொந்தம் என்று திரு. வீரன் எழுதிவைத்த இனாம் செட்டில்மெண்ட் ரத்து பத்திரம் மற்றும் அதனடிப்படையில் சார் ஆட்சியர் திரு. வீ. லெட்சுமணன் வழங்கிய பட்டா ரத்து உத்தவு செல்லாது என்றும் மேற்படி மனுதாரருக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று உத்தரவு ஏதும் இல்லை.

14. 29.10.2004ல் வழங்கப்பட்ட தயார் நிலை பதிவு செய்ய கோரி அறிவிப்பு கடிதம் வழங்கிய தேதியில் இருந்து 5 வருடம் 90 நாட்கள் செல்லத்தக்கது . அதாவது 25.1.2010 க்குள் நில உரிமையாளர் உரிய ஆவணங்களை தயார் நிலை பதிவு செய்து கொள்ள வேண்டும். ஆனால், மேற்படி கால அவகாசத்திற்குள் திரு. வீரனோ திரு. வீ. லெ்ட்சுமணனோ அல்லது அன்றைய தேதியில் அந்த இடத்திற்குச் சொந்தமான உரிமையாளர் எவரும் இவ்வலுவலகத்தில் தயார் நிலை பதிவு செய்யப்படவில்லை. எனவே, மேற்படி நோட்டீஸ் காலாவதியான பின்பு அவ்விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டு அதன் விபரம் இவ்வலுவலகத்தில் இருந்து 5.5.2014 அன்று தெரிவிக்கப்பட்டுவிட்டது.

15. மேற்படி தாவாவிற்கு உரிய இடம் திரு. வீரன் அவர்களிடமிருந்து ஆவண எண்.1766/2005ன்படி திரு. சாந்தார் பெயரில் கிரையம் செய்யப்பட்டது. மேற்படி கிரையம் செய்யப்பட்ட இடம் திரு. சாந்தார் அவர்களால் திரு. அஞ்சப்பன் அவர்களுக்கு பவர்பத்திரம் ஏற்படுத்தி திரு. அஞ்சப்பன் என்பவரிடமிருந்து மருதாயி என்பவருக்கு ஆவண எண்.227/2008ல் கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

16. திரு. லெட்சுமணன் அவர்கள் மேல்முறையீட்டு மனு 3/2011ல் கூடுதல் மாவட் நீதிமன்றம் புதுக்கோட்டையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 27.9.2012ல் செய்த சமாதான பத்திரத்தை எடுத்துக் கொண்டு சமாதான அடிப்படையில் மேற்படி வழக்கானது முடிவு

செய்யப்பட்டதாக தெரிய வருகிறது. மேற்படி சமாதான பிரமான பத்திரத்தில் மருதாயி என்வர் திரு. வீ. லெட்சுமணன் அவர்கள் சகோதரர் திரு. வீ. ராமன் அவர்களுக்கு பொது அதிகார ஆவணம் கொடுத்துள்ளார். அதில் மேற்படி புல எண். உள்ள இடம் என் சார்பில் பவர் ஏஜெண்டாக இருந்து திரு. வீ. லெட்சுமணன் அவர்களுக்கு பதிந்து கொடுக்கும்படி உறுதி கூறியுள்ளதன் அடிப்படையில் நீதிமன்ற வழக்கு இறுதி ஆணை பெறப்பட்டுள்ளது.

17. மேற்கண்ட ஆவணங்களின் அடிப்படையில் கூர்ந்தாய்வு செய்யும்பொழுது மேற்படி மனுதாரர் தமது பெயருக்கு விவசாய விண்ணப்பத்தினை பெயர் மாற்றம் செய்ய கோரிய நாளில் இருந்து அவருக்கு சொந்தம் இல்லை என்பதனை அவர் உரிய அடிப்படை ஆவணங்களை மறைத்து அவருக்கு சாதகமான ஆவணங்களை பயன்படுத்தி பெயர் மாற்றம் மற்றும் தயார்நிலை பதிவு செய்தது அறிய முடிகிறது.

18. மேலும், இந்த விவசாய மின் இணைப்பு தொடர்பாக தாவா மின் வாரியத்தை தொடர்புபடுத்தி மின்சார வாரியத்தை வாதியாக சேர்த்து தொடங்கப்பட்ட W.P.No 4991/2005 22.9.2008 வாயிலாக முற்றுப்பெற்று விட்டதாலும் மனுதாரருக்கு எதிராக தீர்ப்பு பெறப்பட்டதாலும் சொத்து மற்றும் மின் இணைப்பு தொடர்பாக தாவா 2008ல் முடிவுற்றதாக கருத வேண்டியுள்ளது.

19. மேலும், மனுதாரர் பதிவு செய்த மேல்முறையீட்டு மனு A.S. No 3/2008 மற்றும் அதன் பின்பு ஏற்படுத்தப்பட்ட சமரச உடன்படிக்கையில் மின்சார வாரியம் பிரதி வாதியாக சேர்க்கவும் இல்லை. மின் இணைப்பு வழங்க மின்சார வாரியத்திற்கு உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை.

20. மேலுமம், மனுதாரர் திரு. வீ. லெட்சுமணன் மேற்படி தாவாவிற்கு உரிய அதே இடத்தில் புதிதாக இன்றைய தேதியில் உரிய ஆவணம் தயார் செய்து விவசாய மின் இணைப்பு வேண்டி அளித்துள்ள விண்ணப்பம் இவ்வலுவலகத்தில் பதிவு எண்.54/10.6.2014ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பதின் மீது வரிசை கிரம அடிப்படையில் மின் இணைப்பு வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தகவலை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

21. மேலும், மனுதாரர் திரு. வீ. லெட்சுமணன் அவர்கள் இதுநாள் வரை தன் தரப்பு வாதத்திற்குரிய எந்தவிதமான ஆவணங்களும் சமர்ப்பிக்காத பட்சத்தில் அவருடைய மேல்முறையீட்டு மனு ஏற்புடையதல்ல என்பதே எங்கள் தரப்பு வாதமாக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

22. மேலும், மனுதாரர் திரு. வி. லெட்சுமணன் அவர்கள் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு நகலில் சில முக்கியமான ஷரத்துக்கள் விடுபட்டிருப்பதால் சரியான நகல் பெற்று விரைவில் கனம் குறைதீர்பபாளர் வசம் சமர்ப்பிக்க இருப்பதாகவும் கூறியுள்ளார். மேற்படி நகல்கள் மின்

நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் விசாரணையின்போது தாக்கல் செய்யப்பட்வில்லை. எனவே மேல்முறையீட்டில் புதிதாக தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதாலும் மனுதாரரின் மேல்முறையீட்டினை தள்ளுபடி செய்து உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**6. <u>மேல்முறையீட்டாளரின் 11.4.2015 நாளிட்ட கடிதத்திலுள்ள வாதங்கள்</u>**

**6.1** இந்த போலி கிரையம் செல்லாது என புதுக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் OS No 155/2005 என்ற எண்ணுக்கு வழக்கு தொடர்ந்தார். மதுரை உயர்நீதிமன்ற தீர்ப்பு வருவதற்குள் புதுக்கோட்டை சார்பு நீதிமன்ற தீர்ப்பு அவருக்கு எதிராக வரப்பெற்றது. கனம் சார்பு நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து புதுக்கோட்டை கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றத்தில் AS No 3/2008 என்ற எண்ணுக்கு மேல்முறையீடு செய்யப்பட்டது. மேல்முறையீடு தவறுதலுக்காக தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட தாவா சொத்து சம்பந்தமான வழக்கை மீண்டும் கோப்பில் எடுத்து விசாரிக்க மனு செய்தார்.

**6.2** தாவா சொத்து சம்மந்தமான வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்த பொழுது AS No 3/2008 வழக்கினை சமரசமாக முடிக்க எதிர் மனுதாரர் திருமதி. மருதாயி முன் வந்தார். அதன்அடிப்படையில் 27.9.2012ல் அவருக்கு சாதகமான தீர்ப்பினை கனம் மாவட்ட விரைவு நீதிமன்றம் கீழ்க்கோர்ட்டு வழங்கிய தீர்ப்பை இரத்து செய்து இறுதியான தீர்ப்பினை வழங்கியது.

**6.3** கனம் விரைவு நீதிமன்றதில் அவர் பெற்ற 27.9.2012ல் தீர்ப்பு முன்னர் தாவா சொத்து விஷயமாக சார்பு நீதிமன்றத்தில் அவர் கோரியபடி IA No 401/2005 in OS No 155/2005 வழக்கில் 25.11.2005ல் சார்பு நீதிமன்றம் தடையாணை பிறப்பித்து உத்தரவு இடப்பட்ட தேதியிலிருந்து பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாகத்தான் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். இதுவே சட்ட கோட்பாடாகும்.

**6.4** எனவே இந்நிலையில் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் அவர் தாக்கல் செய்த W.P. No 4991 வழக்கில் புதுக்கோட்டை சார்பு நீதிமன்ற தீர்ப்பை மேற்கோடிட்டு தள்ளுபடி செய்தது மதுரை கனம் உயர்நீதிமன்ற கிளை அவர் மனுவினை Merit ல் தள்ளுபடி செய்யப்படவில்லை அவருக்கு விரைவு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்ப 25.11.2005ல் இருந்து அமுலுக்கு வந்து விடுவதால் புதுக்கோட்டை மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன் மேல்முறையீட்டு பதிலுரையில் பக்கம் 5ல் (deemed to be cancelled) என்ற வாதம் ஏற்கதக்கதல்ல.

**6.5** அவர் விவசாய மின் இணைப்பு நீதிமன்ற தீரப்பு மற்றும் சட்டக்கோட்பாடுகளின்படி 25.11.2005லே அமுலுக்கு வந்தவிட்டதால் பக்கம் 6ல் WP No 4991/2005 , 22.9.2008 மதுரை

உயர்நீதிமன்ற கிளை வழங்கிய தீர்ப்பின் வாயிலாக முற்றுப்பெற்றுவிட்டதாக மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் கூறும் வாதம் ஏற்கதக்கதல்ல.

6.6 தாவா சொத்து விஷயமாக மின் இணைப்பு பெற 29.10.2014ல் இருந்து 25.1.2010 தேதி வரை (5 வருடம் 90 நாட்கள்) அவர் மின் இணைப்பு பெற மின் பகிர்மான கழக விதிமுறைகள் உள்ளது. ஆனால், அவர் நீதிமன்ற சட்டக்கோட்பாடுகளின்படி 25.11.2005லே தயார்நிலை பதிவேட்டில் பதிவு செய்து அவர் மின் இணைப்பு பெற உரிமை பெற்று விட்டார் என்பதால் மின்வாரிய அதிகாரிகள் பக்கம் 5ல் திரு. வீரனோ, திரு. லெட்சுமணனோ தயார்நிலை பதிவு செய்யப்படவில்லை. எனவே, நோட்டீஸ் காலாவதியாகிவிட்டது என்று சட்டக்கோட்பாடுகளை கவனத்தில் எடுததுக்கொள்ளாமல் நுகர்வோர் மன்றம் அவர் மனுவை 2.12.2014ல் தள்ளுபடி செய்த இயற்கை நீதிநெறி முறைகளுக்கும் சட்ட ஷரத்துக்களுக்கும் உண்மை நடப்புகளுக்கும் விரோதமானது.

6.7 நீதிமன்ற கோட்பாடு சட்ட ஷரத்துக்களின்படி மின்பகிர்மான கழக விதிமுறைகளின்படியும், 25.11.2005லே அவர் தயார்நிலை பதிவேட்டில் பதிவு செய்ய உரிமை பெற்று விட்டதால் மின் வாரியத்தை பிரதிவாதியாக எதுவும் சேர்க்கப்படவில்லை என்ற வாதம் ஏற்க தக்கதல்ல.

6.8 கனம் நீதிமன்றத்தில் 27.9.2012ல் வழங்கப்பட்ட உத்தரவில் compromise petition இணைத்து உத்தரவு வழங்கவில்லை. compromise petition விடுபட்டுவிட்டது. எனவே அவர் மீண்டும் அவரது வழக்குரைஞர் மூலம் உரிய மனு சமர்ப்பித்து compromise petition பெற்று நீதிமன்ற தீர்ப்புடன் இணைத்து கனம் மின்வாரிய குறைதீர்ப்பாளர் அவர்கள் வசம் சமர்ப்பிக்க அவருக்கு முழு உரிமை உண்டு என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறார்.

## 7. <u>மின்குறைதீர்பாளரின் கேட்புரை</u>

7.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 16.4.2015 அன்று மின் குறைதீர்ப்பாளர் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு. வீ. லெட்சுமணன் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

7.3 எதிர்மனுதாரர் சார்ப்பில் திரு. D. ரகுராஜ், செயற்பொறியாளர் கீரனூர் அவர்கள் கலந்து கொண்டு தங்களது தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

## 8. மேல்முறையீட்டாளர் கேட்புரையின்பொழுது எடுத்துரைத்த வாதங்கள்

8.1 மேல்முறையீட்டாளர் திரு. வீ. லெட்சுமணன் அவர்கள் கேட்புரையின்பொழுது கலந்து கொண்டு அவர் தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார். அவர் தன்னுடைய மனுவிலுள்ள வாதங்கள் மற்றும் 11.4.2015 நாளிட்ட கடிதத்திலுள்ள வாதங்களையும் மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 வழக்கு எண். AS 3/2011 உள்ள தீர்ப்பின்படி சர்வே எண்.132/123 ல் உள்ள நிலம் சமரச உடன்படிக்கையின்படி, அவருக்கு உரிமையானது என்று மாவட்ட கூடுதல் (விரைவு) நீதிமன்றம் ஆணையிட்டுள்ளதால் அவருக்கு மேற்கண்ட நிலம் சொந்தம் என்றும், மேற்கண்ட தீர்வு OS No 155/2005 வழக்கில் 25.11.2005 சார்பு நீதிமன்ற தடையாணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட தீர்வாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வாதிட்டார்.

8.3 மேலும், வழக்கு எண்.AS 3/2011ல் உள்ள தீர்வில் Trial Court's decree and judgment are set aside என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால் வழக்கு எண்.OS No 155/2005ல் அவருக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்வு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் எனவே, அவர்தான் நிலத்தின் உரிமையாளர் என்று தெரிவித்து அவருக்கு விவசாய மின் இணைப்பு வழங்க வேண்டும் என்ற வாதிட்டார். மேலும், உரிமைக்கு சான்றாக பட்டா மாறுதல் உத்தரவின் நகலையும் சுட்டிக்காட்டினார்.

8.4 மேலும், மேற்கண்ட நிலத்தின் உரிமை மீது நீதிமன்றத்தில் வழக்கு இருந்ததால் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட தயார்நிலையை இரத்து செய்தது தவறு என்று வாதிட்டார்.

8.5 தயார் நிலை பதிவு செய்யும்பொழுது தன்னுடைய பட்டா ரத்து ஆன விவரம் தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தார்.

8.6 அவர் தன்னுடைய தகப்பனார் பதிவு செய்த விண்ணப்பம் ரத்து என்று அறிவித்தால்தான் புதிய விண்ணப்பத்தை பதிவு செய்ததாகவும் தெரிவித்தார். ஆனால், அது தன்னுடைய பழைய விண்ணப்பத்திற்கு மின் இணைப்பு கோரும் கோரிக்கையின் முடிவு சாதகமாக வரவில்லையெனில் ஏற்படும் கால இழப்பை தவிர்க்க செய்யப்பட்ட ஏற்பாடு என்றும் வாதிட்டார்.

8.7 தான செட்டில்மெண்ட் மூலம் கொடுக்கப்பட்ட சொத்தை தானமாக கொடுத்தவர் ரத்து செய்வது சட்டப்படி செல்லாது என்றும், வாதிட்டு எனவே, மேற்கண்ட சொத்தின் உரிமை தனக்கு தன்னுடைய தகப்பனார் தான செட்டில்மெண்ட் செய்த நாளிலிருந்து உள்ளது என்று வாதிட்டார்.

## 9. எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்

9.1 எதிர்மனுதாரர் சார்பில் திரு. டி. ரகுராஜ், செயற்பொறியாளர்/கீரனூர் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

9.2 செயற்பொறியாளர், மேல்முறையீட்டாளரின் பெயருக்கு மாற்றப்பட்ட பட்டா மாற்றம் DRO அவர்களால் 6.12.2004 அன்று ரத்து செய்யப்பட்டுள்ளது. ஆனால், அந்த விஷயத்தை மறைத்து மேல்முறையீட்டாளர் 27.12.2004 அன்று தன்னுடைய தயார் நிலையை பதிவு செய்துள்ளார். திரு. வீ.லட்சுமணன் பெயரிலிருந்த பட்டா மாறுதல் உத்தவு 6.12.2004ல் ரத்து செய்யப்பட்டுவிட்டதால் தயார்நிலை பதிவு செய்யும்பொழுது மேல்முறையீட்டாளர் அந்த நிலத்தின் உரிமையாளர் அல்ல, எனவே, அவரின் தயார் நிலை நிலைக்கத்தக்கது அல்ல என்று வாதிட்டார்.

9.3 மேலும், உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையின் 22.9.2008 நாளிட்ட ஆணையின்படி மேல்முறையீட்டளாரின் கோரிக்கையான மேலமுத்துக்காடு கிராமம் சர்வே எண்.132/123 என்ற இடத்திற்கு விவசாய மின் இணைப்பு வழங்க முடியாது என்று தீர்வு செய்துள்ளதால் அவரின் வழக்கு 22.9.2008ல் முடிவுக்கு வந்துவிட்டது என்றும், எனவே, அவருடைய விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் அன்றே ரத்து என்று ஆகிவிடுகிறது. எனவே, அந்த விண்ணப்பத்திற்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்பது அந்த தீர்விற்கு எதிரானது என்று வாதிட்டார்.

9.4 மேலும், தற்பொழுது, மேல்முறையீட்டாளருக்கு கிடைத்துள்ள தீர்வும் ஒரு சமரச உடன்பாடுபடி ஏற்பட்டது என்பதினால் மேல்முறையீட்டாளரின் வாதமான OS 155/2005ன் இடைக்கால தடையிலிருந்து அவர் சொத்தின் உரிமையாளர் என்பது ஏற்புடையது அல்ல என்றும் வாதாடினார்.

9.5 மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் 5.5.2014ல் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், அதன்பின்பு மேல்முறையீட்டாளர் புதிய மின்இணைப்பு வேண்டி 10.6.2014 பதிவு செய்துள்ளார் என்றும் அந்த விண்ணபத்தின் பதிவு எண்.54 என்றும் தெரிவித்தார்.

9.6 மேலும், 27.9.2012அன்று நீதிமன்ற உத்தரவை பெற்ற மேல்முறையீட்டாளர் இரண்டு வருடகாலம் கழித்துதான் மன்றத்தில் மனு செய்துள்ளார் என்றும் எனவே, அவரின் விண்ணப்பம் காலங்கடந்தது என்றும் வாதிட்டார்.

## 10. மேல்முறையீட்டாளரின் எழுத்துபூர்வமான வாதுரை

10.1 மேல்முறையீட்டாளரின் தன்னுடைய எழுத்துபூர்வமான வாதுரையை 25.4.2015 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ளார். அவைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

10.2 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மனறம் தனது எதிர் உரையின் compromise petition அவர்கள் முன் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, மனுதாரர் மேல்முறையீட்டில் compromise petition ஐ அனுமதிக்க கூடாது என்று கூறியுள்ளனர். அவருக்கு வழங்கப்பட்ட நீதிமன்ற திர்ப்புடன் compromise petition இணைத்துவழங்கப்படவில்லை. பிறகு அவரது வழக்கறிஞர் மூலம் மனு சமர்ப்பித்து compromise petition பெற்றுள்ளார். எனவே, நீதிமன்றத்தல் ஏற்படும் காலதாமத்தற்கு மேல்முறையீட்டாளராகிய அவர் பொறுப்பேற்க இயலாது. எனவே, அவரது compromise petition ஐ அனுமதிக்க வேண்டுகிறார்.

10.3 மேலும், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் உண்மை ஆவணங்களை மறைத்து விவசாய விண்ணப்பித்தினை அவர் பெயர் மாற்றம் செய்ததாக பக்க எண்.6ல் வாதிடுகின்றனர். சட்ட சரத்துக்களின்படி இனாம் செட்டில்மெண்ட் 31.1.2003ல் அவரது தகப்பனார் எழுதி வைக்கப்பட்ட தேதியிலிருந்தே அவருக்கு எல்லா உரிமையும் உண்டு என்று எல்லோருக்கும் தெரிந்த உண்மை

10.4 நீதிமன்றம் 27.9.2012ல் சர்வே எண்.132/123 தாவா வழக்கு சொத்தை அவருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று புதுகை கூடுதல் விரைவு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது இந்த உத்தரவை எதிர்த்து எதிர்மனுதாராகிய திருமதி. மருதாயி என்பவர் எந்த ஒரு நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்ய முடியாது. ஏனெனில் வழக்கு சமரசமாக முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி 27.9.2012ல் அவர் பெற்ற தீர்ப்பு புதுகை சார்பு நீதிமன்றம் 25.11.2005ல் அவருக்கு சாதகமாக பிறப்பித்த தடையாணை உத்தரவிலிருந்தே அமலுக்கு வந்து விடுகிறது.

10.5 27.9.2012ல் அவர் புதுகை கூடுதல் விரைவு நீதிமன்றத்தில் பெற்ற தீர்ப்பு சார்பு நீதிமன்றம் தடையாணை புறப்பித்த தேதியிலிருந்து அமலுக்கு வந்து விடுகிறது என்பதற்கு சான்றாக கீழ்கண்ட இரண்டு ஆவணங்களை தாக்கல் செய்கிறார்.

1. AIR 1976 SC 492 / 1976 (1) 194

2. Definition of court which passed a decree Act No 104 of 1976, S 17 (wef 1.2.1977)

10.6 கணம் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் புதுக்கோட்டை பக்கம் 7 எண்.54/16.6.2014ல் மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் பதிவு செய்துள்ளார். வரிசைகிரமப்படி மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறுகின்றனர். இந்த விவசாய பதிவு ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்கு மேலாக ஆகும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. ஆனால் அவர் தற்போது அரசால் அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இலவச மின் இணைப்பிற்காக நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் அவர் 55/1988ல் தகப்பனார் பதிவு செய்த மின் இணைப்பை பெறுவதற்கு அவருக்கு சட்டப்படியான முழு உரிமையும் உண்டு என்ற வாதத்தை மின்குறைதீர்ப்பாளர் முன் வைக்கிறார். புதுக்கோட்டை மின் நுகர்வோர்

குறைதீர்க்கும் மன்றம் சட்ட சரத்துகளை ஆராயாமல் அவரது மனுவை தள்ளுபடி செய்தது துரதிஷ்டமானது.

## 11. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

11.1 இருதரப்பினரின் வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது இந்த வழக்கில் வழக்கெழு வினாக்களாக கீழ்கண்டவைகள் தெரிகின்றன.

(i) மேல்முறையீட்டாளர் விவசாய மின் இணைப்பு பெறுவதற்காக தயார் நிலையை பதிவு செய்யும்பொழுது அவர் அந்த நிலத்தின் உரிமையாளர் இல்லை என்பதால் அந்த தயார்நிலை பதிவு தவறு என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையதா ?

(ii) மேல்முறையீட்டாளர் நீதிமன்றம் மேற்கண்ட சொத்து அவருக்கு உரிமையுடையது என்று தீர்வு செய்துள்ளதால் அவர்தான் அந்த நிலத்தின் உரிமையாளர் எனவே தனக்கு அந்த விவசாய விண்ணப்பத்திற்கு மின் இணைப்பை வழங்க வேண்டும் என்பது ஏற்புடையதா ?

## 12. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு</u>

12.1 எதிர்மனுதாரர் திரு. வீ. லட்சுமணன் அவர்களுக்கு அவரின் தகப்பனார் திரு. வீரன் அவர்கள் முத்துகாடு கிராமம் புல எண்.132/123 உள்ள நிலத்தை தானமாக கொடுத்துள்ளார் என்று தெவித்துள்ளதால் திரு. வீரன் பெயரிலுள்ள விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் பெயர் மாற்றம் மற்றும் தயார் நிலையை பதிவு செய்ய அனுமதி வழக்கறிஞரின் கருத்துரையின்படி 10.12.2004ல் வழங்கப்பட்டது.

12.2 ஆனால், திரு. வீரன் அவர்கள் வீ. லட்சுமணன் பெயருக்கு மேற்கண்ட நிலத்திற்கு வழங்கிய பட்டா மாறுதல் உத்தரவை புதுக்கோட்டை சார் ஆட்சியர் 6.12.2004 அன்று ரத்து செய்து உத்தரவு வழங்கியுள்ளார் என்று தெரிவித்து திரு. லட்சுமணனுக்கு மின் இணைப்பு வழங்கக் கூடாது என்று ஆட்சேபணை தெரிவித்துள்ளார்.

12.3 திரு. லட்சுமணன் அவர்கள், அவருடைய பெயருக்கு மாற்றப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டு விட்டது என்பதை மறைத்து தன்னுடைய தயார் நிலையை 27.12.2004ல் பதிவு செய்துள்ளார். ஆனால், அவருடைய பெயரிலிருந்த பட்டா 6.12.2004ல் ரத்து செய்யப்பட்டு விட்டதால் 27.12.2004 அன்று திரு. லட்சுமணன் அவர்கள் நிலத்தின் உரிமைதாரர் அல்ல எனவே, அவரின் தயார் நிலை பதிவு செல்லத்தக்கது அல்ல என்றும் அது ரத்து செய்யப்படவேண்டியது என்றும் வாதிட்டார்.

12.4 மேல்முறையீட்டாளர் மேற்படி பட்டா ரத்து செய்ததை சீராய்வு செய்யவேண்டும் என்று தான் DRO அவர்களுக்கு மனு செய்துள்ளதாகவும், மேலும், நீதிமன்றத்தில் சொத்துரிமை பற்றி வழக்கு தொடுத்து தற்பொழுது புதுகை கூடுதல் விரைவு நீதி மன்றத்தின் 27.9.2012 நாளிட்ட

தீர்வின்படி அவர்தான் அந்த சொத்தின் உரிமையாளர் என்பதால் அவர் தற்பொழுது பெற்ற தீர்ப்பு புதுகை சார்பு நீதிமன்றம் அவருக்கு சாதகமாக தடையாணை பிறப்பித்த தினமான 25.11.2005லிருந்து அமலுக்கு வருகிறது என்றும் வாதாடினார்.

12.5 இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் தன்னுடைய தயார் நிலையை 27.12.2004ல் பதிவு செய்துள்ளார். ஆனால், 6.12.2004 நாளிட்ட புதுக்கோட்டை சார் ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் என்ற ஆணையில் மேல்முறையீட்டளர் பெயரில் வழங்கப்பட்ட பட்டா மாறுதல் ரத்து செய்ப்பட்டு மீண்டும் வீரன் மகன் வீரன் என்ற பெயரில் பட்டா பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டள்ளது. அந்த ஆணையின் குறிப்பிடப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மேற்கண்ட விபரங்களைத் தொகுத்துப் பார்க்கும்போது மேல்முறையீட்டாளர் இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தின்படி 31.1.2003 அன்று பதிவு செய்து கொடுத்ததின் பேரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் இனாம் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளபடி மேற்படி இனாம் செட்டில்மெண்டினை 16.6.2003ல் ரத்து செய்துள்ளார். இனாம் செட்டில்மெண்ட் 10.6.2003ல் ரத்து செய்யப்பட்ட பின்பு 26.3.2003ல் பட்டா மாறுதல் செய்துள்ளது. எனவே, குளத்தூர் வட்டாட்சியர் தொ.மு.பி.ட்டி. ஆர்.630/03–04/நாள் 24.6.2003 பட்டா மாறுதல் உத்தரவினை ரத்து செய்ய மீண்டும் வீரன் மகன் வீரன் பெயரில் பட்டா பதிவு செய்ய ஆணை பிறப்பிக்கப்படுகின்றது. இந்த மேல்முறையீடு அனுமதித்து ஆணையிடப்படுகிறது"*

12.6 மேற்கண்ட ஆணையின்படி, மேல்முறையீட்டாளருக்கு கொடுக்கப்பட்ட பட்டா 6.12.2004 நாளிட்ட புதுக்கோட்டை சார் ஆட்சியர் அவர்களின் (8.12.2004 நாளிட்ட கையொப்பமிடப்பட்டுள்ளது) ஆணையின்படி ரத்து செய்யப்பட்டு விட்டது என்று தெரிகிறது. மேலும், மேல்முறையீட்டாளர் DRO முன்பாக சீராய்வு செய்ய 22.12.2004 மனு செய்துள்ளாகவும் தெரிகிறது. ஆனால், மேல்முறையீட்டளார் தன்னுடைய தயார் நிலையை பதிவு செய்தது 27.12.2004 அன்று ஆகும். 27.12.2004ல் மேல்முறையீட்டாளர் வருவாய் ஆவணங்களின்படி அவர் அந்த விவசாய விண்ணப்பம் கோரியுள்ள நிலத்தின் உரிமையாளர் அல்ல. மேல்முறையீட்டாளர் 22.12.2004ல் DRO விடம் சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளார் என்பதால் அவர் பட்டா ரத்து செய்யப்பட்டுவிட்டது என்பதை அறிந்தும் தன்னுடைய தயார் நிலை பதிவு செய்துள்ளார் ஒரு விவசாய விண்ணப்பத்திற்கு அந்த நிலத்தன் உரிமையாளர்தான் தன்னுடைய தயார்நிலையை பதிவு செய்யமுடியும். ஆனால், மேல்முறையீட்டாளர் அவரின் பட்டா ரத்து செய்யப்பட்டுவிட்டதால் அவர் அந்த நிலத்தின் உரிமையாளர் அல்ல. எனவே நிலத்தின்

உரிமையாளர் இல்லை என்ற நிலையில் அந்த நிலத்திற்கு விவசாய மின் இணைப்பிற்காக தயார் நிலையை பதிவு செய்வது என்பது ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

13. **<u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>**

13.1 மேல்முறையீட்டாளர் AS No 3/2011 ல் உள்ள தீர்வின்படி அவர் முத்துக்காடு கிராம புல எண்.132/123ல் உள்ள நிலமும் கிணறும் அவருக்குத்தான்சொந்தம் என்று புதுகை சார்பு நீதிமன்றம் தன்னுடைய 27.9.2012ல் தெரிவித்துள்ளது என்று வாதிட்டு தனக்கு மேற்கண்ட நிலத்தில் ஏற்கனவே அவர் பதிவு செய்துள்ள தயார்நிலை அடிப்படையில் விவசாய மின்இணைப்பு வழங்கப்படவேண்டும் என்று வாதிட்டார்.

13.2 மேலும், மேற்கண்ட தீர்வு அவருக்கும் அந்த வழக்கின் எதிர்மனுதாரர் திருமதி. மருதாயி அவர்களுக்கும் ஏற்படுத்தப்பட்ட சமரச உடன்பாடின்படி பிறப்பிக்கப்பட்ட தீர்வு என்பதால் மேற்கண்ட தீர்விற்கு எதிராக திருமதி. மருதாயி அவர்கள் மேல்முறையீடு செய்ய முடியாது என்றும் வாதிட்டுள்ளார்.

13.3 மேலும், மேற்கண்ட புதுகை கூடுதல் விரைவு நீதிமன்றத்தின் 27.9.2012ல் நாளிட்ட தீர்ப்பு புதுகை சார்பு நீதிமன்றதில் 25.11.2005 அன்று அவருக்கு சாதகமாக பிறப்பித்த தடையாணை உத்தரவிலிருந்து அமலுக்கு வந்து விடுவதால் மின்பகிர்மான கழக விதியின்படி தயார்நிலையை பதிவு செய்ய கொடுக்கப்பட்டுள்ள மொத்த காலமான 5 வருடங்கள் 90 நாட்கள் என்று வரையறைக்குள் அவரது உரிமை நிலை நாட்டப்பட்டுள்ளதால் அவரின் தயார் நிலையை பதிவு செய்து மின் இணைப்பு பெற சட்டப்படி அவருக்கு உரிமை உள்ளது என்று வாதிட்டுள்ளார்.

13.4 மேலும், அவர், மின்சார வாரியத்திற்கு எதிராக மதுரை உயர்நிதிமன்ற கிளையில் அவருடைய WP No 4991 என்ற வழக்கு புதுக்கோட்டை சார்பு நீதிமன்ற தீர்ப்பை மேற்கோடிட்டு தள்ளுபடி செய்துள்ளது என்றும், Meritல் தள்ளுபடி செய்யவில்லை என்றும் வாதிட்டு, எனவே, WP No 4991/2005ல் உயர்நிதிமன்றம் மதுரை கிளையின் தீர்வல் அவருடைய மனுதள்ளுபடி செய்யப்பட்டதால் அவருடைய விண்ணப்பம் Deemed to be cancelled என்ற வாதம் தவறு என்றும் வாதிட்டார்.

13.5 எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளர் தன்னுடைய பெயருக்கு மாற்றப்பட்ட விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணபத்திற்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் தாக்கல் செய்த WP (MP)No 4991/2005 என்ற வழக்கில், மாண்புமிகு உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டாளரின் மனுவை தள்ளுபடி செய்துள்ளதால் அவருக்கு மின் இணைப்பு வழங்க தேவையில்லை என்றும் அது ஏற்கனவே நீதிமன்றத்தால் தீர்க்கப்பட்ட வழக்கு என்றும் வாதிட்டார்.

13.6 மேலும், மேற்கண்ட விவசாய விண்ணப்பம் 5.5.2014 நாளிட்ட செயற்பொறியாளர்/கீரனூர் அவர்களின் கடிதத்தின்படி தயார்நிலையை பதிவு செய்ய 90 நாட்கள் அறிவிப்பு கடிதம் கொடுத்து 5 வருடங்கள் கழிந்த பின்பும் அதாவது 26.1.2010 தேதிக்குள் தயார்நிலையை பதிவு செய்யவில்லை என்பதால், விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டுவிட்டது. எனவே, ரத்து செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் மின் இணைப்பு வழங்க முடியாது என்றும் வாதிட்டார்.

13.7 மேலும், மேல்முறையீட்டாளருக்கு வழக்கு எண். AS 3/2011ல் உள்ள தீர்வு அவருக்கு சாதகமாக 27.9.2012 தீர்வாக உள்ளது என்று தெரிவித்துள்ளார். ஆனால், தனக்கு அந்த நிலத்தில் விவசாய மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று தற்பொழுது தான் விண்ணப்ம் செய்துள்ளார். அதாவது தீர்ப்பு கிடைத்து 2 வருடங்களுக்கு பின்புதான் அதுவும், விண்ணப்பத்தை ரத்து செய்தபின்புதான் கோரியுள்ளார். எனவே, இது காலங்கடந்தது என்று வாதிட்டார்.

13.8 மேலும், மேல்முறையீட்டாளர், மேற்கண்ட நிலத்தில் நிலத்திற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி, புதிய விண்ணப்பத்தை 10.6.2014 அன் பதிவு செய்துள்ளார். விண்ணப்ப பதிவு எண்.54/10.6.2014 ஆகும். ஆனால், தற்பொழுது பழைய விண்ணப்பதிற்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்று கோருவது after thought ஆகும் என்றும் வாதிட்டார்.

13.9 மேலும், புதுகை விரைவு நீதிமன்றத்தின் தீர்வின் நகல், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, மேல்முறையீட்டில் புதியதாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தை ஏற்றுக்கொள்ள கூடாது என்றும் வாதிட்டார்.

13.10 எதிர்மனுதாரர், சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை W.P.No.4991/2005இன் 22.9.2008 நாளிட்ட ஆணையை சுட்டிக்காட்டி மின் வாரியத்தையும் எதிர்மனுதாரராக சேர்த்து மின் இணைப்பு வேண்டும் என்று தொடர்ந்த வழக்கில் அவருடைய மனு தள்ளுபடி செய்யப்பட்டதால் மேற்கண்ட இடத்திற்கு மின்னிணைப்பு கோரும் வழக்கு ஏற்கனவே தீர்வு செய்யப்பட்டுவிட்டது என்பதால், மின் இணைப்பு வழங்க வேண்டியதில்லை என்று வாதிட்டுள்ளதால் மேற்கண்ட தீர்ப்பின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“The petitioner in this writ petitions seeks for a service connection in respect of lands in Survey No 132-123 in Melamuthukadu Village, Burma Colony, Kulathur Taluk, Pudukkottai District. This was pursuant to the application No.55 dated 8.10.1998, which was duly transferred in the name of the petitioner by proceedings dated 10.12.2004*

*xxx xxx xxx*

*3) Thereafter, the third respondent got the Inam Settlement Register in favour of the petitioner and cancelled the registered document No 1225 dated 16.6.2003. Based on the same, the second respondent Reveue Divisional officer cancelled the patta bearing No447 isued by the Deputy Tahsildar, Kulathur Taluk by his proceedings dated 6.12.2004.*

*4) Therefore, in the light of the terms and conditions for the supply of electricity, more particularly, as found in clause 6.02, if a person is not a owner, then he shold be produce a consent letter in the form prescribed by the Board from the real owner of the land. Since, the petitoner had not produced any such letter, the Board cannot accede to the request made by the petitioner.*

*5) In the meanwhile, it is found that the petitioner had filled O.S. No.155 of 2005 against the third respondent from interfering with his properly. The said suit which was tried by the Sub-Judge was dismissed by the judgment dated 25.06.2007. Thereafter, the petitioner's attempt in fillig an appeal in A.S. No.3 of 2008 before the Principal District Judge, Pudukottai also resulted in failure and his Appeal was dismissed on 1.6.2008 for default in appearance.*

*6) In the light of the same, the prayer in the writ petition cannot be countenanced by this court and accordingly, it stands dismissed, "*

**13.11** மேற்கண்ட தீர்ப்பின்படி, திரு. வீ. லட்சுமணன், அவர்கள் நிலத்தின் உரிமை தாரர் அல்லாதவர் என்பதால் நிலத்தின் உரிமைதாரரரிடமிருந்து மின் இணைப்பு பெற ஒப்புதல் பெறவில்லை என்பதால் வாரியம் Terms and Conditions of Supplyயின் clause 6.02ன்படி மனுதாரரின் கோரிக்கையை ஏற்க வேண்டியதில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் தொடர்ந்த வழக்கு எண்.O.S No 155/2005 மற்றும் AS No3 of 2008 ஆகியவைகளும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**13.12** எனவே, மேற்கண்ட தீர்வு, மனுதாரர் அந்த இடத்திற்கு உரிமை இல்லாதவர் என்பதாலும், உரிமையாளரின் சம்மதக் கடிதம் பெறவில்லை என்பதாலும், மின் இணைப்பு வழங்க வேண்டியது இல்லை என்று அறிய முடிகிறது.

**13.13** ஆனால், AS No3 of 2011 என்ற வழக்கில் மாவட்ட நீதிமன்றம் கீழ்கண்ட தீர்வை வழங்கியுள்ளது.

*"This appeal suit filed by the appellant against the respondent to set side the dismissal of lower court decree and judgment in O S No.155/2005 dated 25.7.2007 on the file of learned sub court, Pudukkottai and allow the appeal with Costs.*

*Appellant and 3rd Respondent's power agent present compromise memo filed and recorded. Trial Court's decree and Judgment are set aside and decree is passed in terms of compromise. No Costs."*

**13.14** மேற்கண்ட தீர்வை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது கீழமை நீதிமன்றத்தின் உத்தரவு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று தெரிகிறது. மேலும், சமரச உடன்படிக்கையின்படி ஆணை இடப்பட்டுள்ளது என்றும் தெரிகிறது. சமரச உடன்படிக்கையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>ராசி உடன்படிக்கை விவரம்</u>*

*.1) அப்பீல் வாதி லெட்சுமணனின் தகப்பனார் வீரன் அப்பீல் வாதி லெ்டசுமணனுக்கு **31.1.2003**ல் எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரப்படி வழக்குச் சொத்து அப்பீல் வாதி லெட்சுமணனுக்கு மட்டில் பாத்தியப்பட்டது ஆகும். வழக்குச் சொத்தும் நாளது தேதிவரை அப்பீல் வாதி அனுபவத்திலேயே இருந்து வருகிறது. வழக்கு சொத்தில் அப்பீல் எதிர்வாதிகளுக்கு எந்தவிதமான உரிமையும் அனுபவமும் கிடையாது. கீழமை நிதிமன்றம் பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து இந்த மேல்முறையீட்டை அனுமதித்து வழக்குச் சொத்து அப்பீல் வாதி லெட்சுமணனுக்கு மட்டில் பாத்தியம் மற்றும் அனுபவம் உள்ளது என முடிவு செய்து வழக்குறையில் வாதி கோரியிருக்கிறபடி தீர்ப்புரை மற்றும் தீர்ப்பானை பிறப்பிக்க வேண்டியது*

*<u>சொத்து விபரம்</u>*

*புதுக்கோட்டை பதிவு மாவட்டம் குளத்தூர் துணைப் பதிவு மாவட்டம் புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூா தாலுகா, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம் முத்துக்காடு கிராம ஊராட்சி மன்ற எல்லைக்குட்பட்டதும், துடையூர் வட்டம் முத்துக்காடு கிராமம், புல எண்.**132/123** புன்செய் ஹெக்டேர் **0.92.5** ஏர்ஸ்க்கு ஏக்கர் **2.28** செண்ட்."*

*"*

**13.15** ராசி உடன்படிக்கையின்படி லட்சுமணனுக்கு அவர் தகப்பானர் எழுதி கொடுத்த தான செட்டில்மெண்படி, வழக்கு சொத்து லட்சுமணனுக்கு மட்டும் பாத்தியப்பட்டது ஆகும். வழக்கு சொத்து இதுநாள்வரை திரு. லட்சுமணன் அனுபவத்திலேயே உள்ளது என்றும், கீழமை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து சொத்து லட்சுமணனுக்கு மட்டும் பாத்தியம் மற்றும் அனுபவம் உள்ளது என்று முடிவு செய்து தீர்ப்புரை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**13.16** மேற்கண்ட சமாதான உடன்படிக்கைன்படி மாவட்ட கூடுதல் (விரைவு) நீதிமன்றம் தன்னுடைய ஆணையை 27.9.2012ல் பிறப்பித்துள்ளதால் முத்துக்காடு கிராமம் புல எண்.132/123 என்ற நிலம் திரு. லட்சுமணனுக்கு சொந்தம் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மேலும்,

சமரச உடன்படிகையில் சொத்து திரு. லட்சுமணன் அனுபவத்திலே தான் 31.1.2003லிருந்து உள்ளது என்றும் தெளிவாகிறது.

13.17 இந்த வழக்கிலுள்ள சொத்தின் உரிமையை பற்றி நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையிலிருந்து 27.9.2012ல்தான் முடிவு பெற்றுள்ளது. சொத்தின் உரிமை பற்றிய வழக்கு OS No155/2005, 2005ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது I.A. No 401/2005 in OS No155/155, 21.11.2005 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு 27.9.2012 அன்றுதான் முடிவுக்கு வந்துள்ளது.

13.18 இந்த முறையீட்டின் சொத்து மற்றும் மின்னிணைப்பு கோரிய வழக்குகளின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (1) | WP No 4991 of 2005 | | |
| | தாக்கல் செய்த நாள் | – | 4.6.2005 |
| | தீர்வு வழங்கிய நாள் | – | 22.9.2008 |
| (2) | OS No155 of 2005 | | |
| | தீர்ப்பு நாள் | – | 25.7.2007 |
| (3) | AS No3 of 2008 | | |
| | தீர்ப்பு நாள் | – | 11.6.2008 |
| (4) | AS No3 of 2011 | | |
| | தீர்ப்பு நாள் | – | 27.9.2012 |

13.19 மேற்கண்ட தகவல்களின்படி இந்த முறையீட்டில் சம்பந்தபட்டுள்ள நிலத்தின் உரிமை சம்பந்தமாகவும் மற்றும் மின் இணைப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை சம்மதமாகவும் வழக்குகள் 4.6.2005 முதல் 27.9.2012 வரை இருந்துள்ளன என்று அறிய முடிகிறது.

13.20 இந்த முறையீட்டிலுள்ள நிலத்திற்கு மின் இணைப்பு வழங்க 90 நாள் அறிவிப்பு கடிதம் 29.10.2004 அன்று அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட விண்ணபத்தினை திரு. வீரன் அவர்களின் பெயரிலிருந்து திரு. வீ. லட்சுமணன் பெயருக்கு மாற்றும்பொழுது தயார்நிலையை பதிவு செய்ய அனுமதிக்கப்பட்ட கடைசி நாள் 25.1.2005 ஆகும் என்று 10.12.2004 நாளிட்ட செயற்பொறியாளர் கீரனூர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அவரின் தயார்நிலையை பதிவு செய்ய வேண்டிய கடைசி நாளுக்கு பின்பு 5 மாதங்களுக்குள் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு அவை 27.9.2012ல் தான் முடிவுக்கு வந்துள்ளன. ஆனால், நீதிமன்ற உத்தரவு பெற்று இரண்டு வருடங்கள் மற்றும் இரண்டு நாட்கள் கழிந்த பின்பு அவர் மின் இணைப்பு கேட்டு மனு செய்துள்ளார் என்று தெரிகிறது.

**13.21** எதிர்மனுதாரர் **29.10.2004**ல் வழங்கப்பட்ட தயார்நிலை பதிவு செய்ய கோரி அறிவிப்பு கடிதம் வழங்கிய தேதியிலிருந்து **5** வருடங்கள் **90** நாட்களுக்குள் நில உரிமையாளர் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து தயார் நிலையை பதிவு செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு தயார்நிலையை பதிவு செய்யாவிடில் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டுவிடும் என்று வாதிட்டு மேற்கண்ட விண்ணப்பத்திற்கு திரு. வீரன் அவர்களோ அல்லது வீ. லட்சுமணன் அவர்களோ அல்லது அந்த தேதியில் அந்த இடத்திற்கு சொந்தமான உரிமையாளரோ உரிய ஆவணங்களை சமர்ப்பித்து தயார் நிலை பதிவு செய்யவில்லை என்பதால் மேற்கண்ட விண்ணப்பம் **5.5.2014** அன்று ரத்து செய்யப்பட்டுள்ளது என்று வாதிட்டுள்ளார். இதில் தயார் நிலையை பதிவு செய்ய கால அவகாசம் 5 வருடம் உள்ளது என்று தெரிவித்துள்ளதால் தலைமை பொறியாளர்/திட்டமிடல் அவர்களின் **22.9.2009** நாளிட்ட கடிதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*Lr.No.SE/RE&I(D)/EE/RE/A1/F.Doc/D.1529/2009(Technical Branch) dated 22.9.2009*

*Sub: Electricity – Delegation of Power to CEs/D/Region to deal with the representations from Public/Applications relating to new agriculture connections – orders issued – Reg.*

*Ref: Memo No.SE/RE&I (D)/EE/RE/A1/F.Doc/D.256/05 dt.3.3.2005*

****

*In Modification of the orders issued vide reference memo cited, Chairman has accorded approval to the following related to delegation of power to CEs/Region/to deal with the representations relating to new agriculture service connection.*

*(i) In case of delay in reporting readiness of agricultural applicants even beyond the extended period of one year, extension of time may be given to the original applicant/legal heirs, as the case may be for entering readiness upto 5 years from the date of expiry of 90 days notice period once the party has attained the normal seniority. However, this should not be applicable to purchaser of the land who purchases the land after expiry of 90 days notice period for entering readiness.*

*(ii) The applicants which were kept pending (except court case/dispute case) after compelting 5 years from the date of expiry of 90 days notice period may be cancelled and intimated to the applicant.*

*(iii) Cancelled applicants need not be revoked.*

*(iv) Applicants whose applications released /readiness entered, but supply was not availed due to court case/dispute supply may be effected without any time limtit, if the case is ended in favour of the applicant on priority.*

*A. Dharmaraj*
*Chief Engineer/Planning&Resource Centre"*

**13.22** மேற்கண்ட ஆணையின் பத்தி (iv)ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது நீதிமன்ற நிலுவையிலுள்ள மற்றும் நிலுவையிலுள்ள விவசாய விண்ணப்பங்களை தயார் நிலை பதிவு செய்ய கொடுக்கப்பட்ட அவகாசமான **90** நாட்களக்கு பின் **5** வருடங்கள் கழித்த பின்பு ரத்து

செய்ய வேண்டும் என்பது நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கு மற்றும் வேறு வித வழக்குகளில் உள்ள விண்ணப்பங்களுக்கு பொருந்தாது என்று தெரிகிறது.

**13.23** மேலும், விண்ணப்பம் விடுவிக்கப்பட்டு/தயார் நிலையை பதிவு செய்து ஆனால் நீதிமன்றத்திலுள்ள வழக்கு காரணமாக மின் இணைப்பு வழங்க முடியாத நிலையிலிருந்து வழக்கு விண்ணப்பதாரருக்கு சாதகமாக முடிந்தால் விண்ணப்பதாரருக்கு மின் இணைப்பை முன்னுரிமையின்படி வழங்க வேண்டும் என்று தெரிகிறது. மேற்கண்ட நிலையில் காலக்கெடு எதுவும் இல்லை என்று தெரிகிறது.

**13.24** என் முன்னால் உள்ள இந்த வழக்கிலும் மேல்முறையீட்டாளரின் தந்தையின் பெயரிலுள்ள விண்ணப்பம் விடுவிக்கப்பட்டு மேற்கண்ட நிலத்தின் உரிமை சம்பந்தமான நீதிமன்ற வழக்கின் காரணமாக மின்னிணைப்பை பெற முடியவில்லை. எனவே, மேற்கண்ட தலைமை பொறியாளர்/திட்டமிடலின் **22.9.2009** நாளிட்ட ஆணையின் (iv)வது பத்தியின்படி இந்த மேல்முறையீட்டாளர் புல எண்.**132/123**ல் உள்ள கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பை பெற தகுதியானவர் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**13.25** வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வின்படி மேல்முறையீட்டாளர் தன்னுடைய தயார்நிலையை மேற்கண்ட நிலத்தின் உரிமை அவரின் பெயரிலிருந்த பட்டா ரத்து செய்யப்பட்ட காலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் அந்த தயார் நிலை பதிவு தவறு என்று தீர்வு செய்யப்பட்டுள்ளது. வழக்கு முடிந்த பின்பு இரண்டு வருடமும் இரண்டு நாட்களும் கடந்த பின்புதான் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு கேட்டு மனு செய்துள்ளார். நீதிமன்றத்தில் வழக்கு இருந்த காலங்களை தவிர்த்து பார்த்தால் அவர் மின் இணைப்பு கோரும் மனு, தலைமை பொறியாளர் திட்டமிடல் அவர்களின் **22.9.2009** நாளிட்ட ஆணையில் குறிப்பிட்டுள்ள தயார் நிலையை பதிவு செய்ய **90** நாட்கள் அறிவிப்பு கொடுக்கப்பட்ட **90** நாட்கள் கடந்த பின்பு உள்ள ஐந்து வருட காலத்திற்குள்தான் மனு செய்துள்ளார் என்று தெரிகிறது. எனவே, மேல்முறையீட்டாளர் தன்னுடைய தயார்நிலையை பதிவு செய்ய கால அவகாசம் பெறுவதற்கு வாரிய விதிகளின்படி தகுதியானவர் என்று தெரிகிறது. எனவே, எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளர் மேலமுத்துக்காடு புல எண்.**132/123**ல் உள்ள நிலத்திலுள்ள கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு பெற அவருடைய தயார் நிலையை பதிவு செய்ய உரிய கால அவகாசத்துடன் அறிவிப்பு வழங்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**13.26** மேல்முறையீட்டாளர் அவருடைய தயார்நிலையை பதிந்த பின்பு அந்த பதிவின் மூப்பின் அடிப்படையில் விவசாய மின் இணைப்பு வழங்கப்படவேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

14. <u>முடிவுரை</u>

14.1 வழக்கெழு வினா ஒன்று மற்றும் இரண்டிற்கான தீர்வின்படி, மேல்முறையீட்டாளர் மேல முத்துக்காடு புல எண்.132/123ல் உள்ள நிலத்திலுள்ள கிணற்றிற்கு விசாய மின் இணைப்பு பெற அவருடைய தயார்நிலையை பதிவு செய்ய உரிய கால அவகாசத்துடன் அறிவிப்பு வழங்க வேண்டும் என்றும், அவ்வாறு அவர் தயார் நிலையை பதிவு செய்த பின்பு அந்த தயார் நிலை பதிவின் மூப்பின்படி அவருக்கு விவசாய மின் இணைப்பு வழங்க வேண்டும் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

14.2 மேல்முறையீட்டாளருக்கு அவர் தயார்நிலையை பதிவு செய்ய கால அவகாசத்துடன் உரிய அறிவிப்பை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் வழங்க வேண்டும் என்றும், அந்த ஆணையை நிறைவேற்றியது சம்பந்தமான அறிக்கையை இந்த ஆணை கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும் என்று உத்தரவு இடப்படுகிறது.

14.3 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.15/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. வீ. லட்சுமணன்,
த/பெ வீரன்,
விநாயகபுரம் 1ஆம் வீதி,
இராஜகோபாலபுரம் அஞ்சல்,
கட்டியாவயல், புதுக்கோட்டை

2) மேற்பார்வை பொறியாளர்,
புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
3074 கிழக்கு பிரதான சாலை,
புதுக்கோட்டை – 622 011

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
3074 கிழக்கு பிரதான சாலை,
புதுக்கோட்டை – 622 011

4) தலைவர்  மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5)  செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை
எழும்பூர்,  சென்னை – 600 008.

6)  உதவி இயக்குநர் (கணினி)  –    மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.